**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 10** |
| **Name** | : | **திரு. சுகுமாரன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.11.2023**

எதிரிகள் 2,4 ஆஜர். எதிரிகள் 1,3 ஆஜரில்லை., பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது தஞ்சாவூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2017 ம் வருடம் பணி ஓய்வு பெறுவதற்கு முன்பு வரை சாப்டுர் ரேஞ்சில் வனக் காவலராக வேலை செய்தேன். கடந்த 2016 ம் வருடம் 10 வது மாதம், 4 பேர் ஒரு பெண்ணை கெடுத்து கொன்று விட்டு சுந்தரராஜபெருமாள் கோவில் அருகில் புதைத்துவிட்டார்கள். அந்த பகுதி சுந்தரராஜபெருமாள் கோவில் வனச்சரக எல்லைக்கு உட்பட்ட பகுதியாகும். அந்த 4 நபர்கள் பெயர், ஆருன், சுபாஷினி, ஈஸ்வரன், கடாச்செல்வம் ஆகும். இவர்கள் 4 பேரும் ஒரு பெண்ணைக் கொண்டு வந்து கெடுத்து கொன்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

ஒரு பெண்ணைக் கொண்டுவந்து புதைத்து கொன்றுவிட்ட விபரம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. புதைத்து கொன்ற விபரத்தை சொன்னார்கள். விபரம் சொன்னவர் யார் என்று குறிப்பிட்டுத் தெரியாது. எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும் நான் அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை